# மெட்ரோ ரயில் பயணத்தை எளிதாக்கும் 'மொபைல் ஆப்'

சென்னை, பிப். 16–

சென்னையில் மெட்ரோ ரயில் சேவையை எளிதாக மேற்கொள்ள, சி.எம்.ஆர்.எல்., நிறுவனத்தின், 'மொபைல் ஆப்' பெருதவியாக உள்ளதாக பயணியர் கூறுகின்றனர்.

சென்னையில், இரண்டு வழித்தடங்களில், 54 கி.மீ., தொலைவுக்கு மெட்ரோ ரயில் சேவை செயல்படுகிறது. இதில் கட்டணங்கள் அதிகமாக இருந்தாலும், இச்சேவையை பயன்படுத்த மக்கள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

வழக்கமாக, கார், பேருந்து வாயிலாக சென்றால், 30 நிமிடங்கள் ஆகும் பயண துாரத்தை மெட்ரோ ரயிலில், 15 நிமிடங்களில் அடைந்து விடலாம்.

போக்குவரத்து நெரிசல், மாசு, அலைச்சல் பிரச்னைகள் இன்றி, குளுகுளு, 'ஏசி' வசதியில், இதில் பயணிக்கலாம்.

## எளிது

இந்நிலையில், மெட்ரோ ரயில் பயணத்தை மிக துல்லியமாக திட்டமிட்டு மேற்கொள்ள ஏதுவாக, மொபைல் ஆப் சேவையை, சி.எம்.ஆர்.எல்., நிறுவனம் துவக்கி உள்ளது. இதில், மெட்ரோ பயணம் தொடர்பான, 10 வகை வசதிகள் அளிக்கப்படுகின்றன.

ரயில் வரும் நேரம், இணைப்பு வாகன சேவை, பயண கட்டணம் உள்ளிட்ட பல்வேறு தகவல்களை, பயணியர் இருந்த இடத்திலேயே, இந்த ஆப் வாயிலாக அறியலாம்.

இதில் சிறப்பு வசதியாக, டிராவல் கார்டு, டிரிப் கார்டுகளை கூடுதல் தொகை செலுத்தி புதுப்பித்துக் கொள்ளலாம். இதனால் ரயில் நிலைய கவுண்டரில் காத்திருப்பது தவிர்க்கப்படும்.

பயணியரின் டிராவல் கார்டு, டிரிப் கார்டில் எவ்வளவு தொகை இருப்பில் உள்ளது என்பதை அறிந்து, வங்கிகளின் கிரடிட், டெபிட் அட்டை வாயிலாக புதுப்பிக்கலாம்.

## 'கியூ ஆர்' டிக்கெட்

தற்போது, 'கியூ ஆர்' டிக்கெட் வசதி, இதில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆப்பில் உள்ள, 'வாலட்' கணக்கில், பணம் இருப்பு வைக்கலாம். இதை பயன்படுத்தி, கியூ ஆர் முறையில் டிக்கெட் வாங்கிக் கொள்ளலாம்.

தனி பயணம், குழு பயணத்துக்கு டோக்கன் வாங்குவதற்கு பதிலாக, மொபைல் போனில், கியூ ஆர் டிக்கெட்டை பயன்படுத்தலாம்.

இதில் எடுக்கப்படும் டிக்கெட்டுகளுக்கு, பயண கட்டணத்தில், 20 சதவீதம் கழிவு சலுகை வழங்கப்பட்டுள்ளது.

கொரோனா காலத்தில் பணத்தை கையில் தொடாமல், ரயில் நிலையத்தில் எந்த இடத்தையும், டோக்கனையும் தொடாமல் பயணிக்க, இந்த வசதி பேருதவியாக உள்ளது.

## கருத்து தெரிவிக்கலாம்

மெட்ரோ ரயில் பயணம் குறித்த உங்கள் கருத்துகளையும், புகார்கள் எதுவும் இருந்தால், அதையும், இந்த ஆப் வாயிலாக தெரிவிக்கலாம்.

கூகுள் பிளே ஸ்டோர் வாயிலாக, ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் பதிவிறக்கம் செய்து, இதை பயன்

## 10 வசதிகள்

மெட்ரோ ரயில் திட்டம் மொபைல் ஆப் வசதிகள்:



- மெட்ரோ ரயில் வழித்தடத்தை அறியலாம்
- மெட்ரோ ரயில் நிலையங்களில் உள்ள வசதிகளை அறியலாம்
- சம்பந்தப்பட்ட மெட்ரோ ரயில் நிலையத்தில் உள்ள இணைப்பு வாகன வசதிகள்
- அந்தந்த ரயில் நிலையங்களை சுற்றி உள்ள, சுற்றுலா தலங்கள் குறித்த விபரங்கள்
- அடுத்து வரும் ரயில்களின் நேரம் குறித்த துல்லிய தகவல்கள்
- பயண கட்டணம், வாகன நிறுத்துமிடம் வசதி விபரங்கள்
- உணவகம் மற்றும் விடுதி வசதி குறித்த விபரங்கள்
- சம்பந்தப்பட்ட ரயில் நிலைய நுழைவாயில், வெளியேறும் வாயில் விபரங்கள்
- சம்பந்தப்பட்ட மெட்ரோ ரயில் நிலைய அதிகாரியை தொடர்பு கொள்வதற்கான தொலைபேசி எண் விபரங்கள்